செ.வெ.எண்: 177 நாள்: 16.03.2018

திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணியில் அக்டோபர் திங்களில் தாமிரபரணி புஷ்கர விழா தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---------------------------------------------------------------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணியில் அக்டோபர் திங்களில் தாமிரபரணி புஷ்கர விழா தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (16.03.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் அலுவலர்கள் மற்றும் சென்னை மகாலெட்சுமி அறக்கட்டளை நிறுவனர் திருமதி மகாலட்சுமி சுப்பிரமணியம்,திருநெல்வேலி பிராமனர் சங்கம், திருநெல்வேலி தாமிரபரணி வைதீக சமாஜம் உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தாமிரபரணி ஆற்றில் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் தாமிரபரணி புஷ்கர விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு முன்னேற்பாடாக பாபநாசம்,மூக்கூடல்,குறுக்குத்துறை,உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மேற்க்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கணக்கெடுப்பு செய்யபட்டு வருகிறது. மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தேவையான அடிபடை வசதிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஆற்றங்கரை பகுதிகள் உள்ள மண்டபங்களை புரணமைப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கபடும். மேலும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன பல்வேறு பணிகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கபடும் என பேசினார்.

தொடர்ந்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள தாமிரபரணி ஆற்று பகுதி, பேராச்சிசெல்வி அம்மன் கோவில் பகுதி, குறுக்குத்துறை முருகன் கோவில் பகுதி ஆகிய ஆற்றங்கரை பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் நேரில் பார்வையிட்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. முத்துராமலிங்கம், ஊரக வளர்ச்சி திட்ட முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி,மாநகராட்சி ஆணையாளர் திரு.நாராயணநாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது திரு.கணேஷ் குமார்,பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் திரு.மாகின் அபுபக்கர் மற்றும் திருநெல்வேலி பிராமனர் சங்கம், திருநெல்வேலி தாமிரபரணி வைதீக சமாஜம் உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி